ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2065/21 - 2018 අප්‍රේල් මස 04 වැනි බදාදා - 2018.04.04
*2065/21 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ (1) (அ) என்னும் பிரிவின் கீழ் திருகோணமலை நகரமும் சூழலும் பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

திருகோணமலை நகரமும் சூழலும் பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி கேட்டுவிலகியமை காரணமாக வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ (1) (அ) ஆம் பிரிவின் கீழ் திருகோணமலை நகரமும் சூழலும் பிரதேச சபையின் 02 ஆம் இலக்க புளியங்குளம் வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட இராசதுரை சிவராசா என்பவர் அங்கம் வகிக்கின்ற இலங்கை தமிழ் அரசுக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும், அக்கட்சியைச் சேர்ந்தவருமான திருகோணமலை நகரமும் சூழலும் பிரதேச சபையில் 02 ஆம் இலக்க புளியங்குளம் வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்,

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக எலியேசர் ஞானநாயகம் ஞானகுணாளன் என்பவரை பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது திருகோணமலை நகரமும் சூழலும் பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சஜித் வசந்த வெல்கம ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ (1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, எலியேசர் ஞானநாயகம் ஞானகுணாளன் என்பவர், திருகோணமலை நகரமும் சூழலும் பிரதேச சபையின் 02 ஆம் இலக்க புளியங்குளம் வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

சஜித் வசந்த வெல்கம,
தெரிவத்தாட்சி அலுவலர்,
திருகோணமலை நகரமும் சூழலும் பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
திருகோணமலை,
2018, ஏப்பிறல் 04.

4- 680

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழ் திருகோணமலை நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

*திருகோணமலை நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி கேட்டுவிலகியமை காரணமாக வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ (1) (அ) ஆம் பிரிவின் கீழ் திருகோணமலை நகர சபையின் 01 ஆம் இலக்க அன்புவழிபுரம் வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட துரைராசா தனராஜ் என்பவர் அங்கம் வகிக்கின்ற இலங்கை தமிழ் அரசுக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது(30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும், அக்கட்சியைச் சேர்ந்தவருமான திருகோணமலை நகர சபையின் 01 ஆம் இலக்க அன்புவழிபுரம் வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்,*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக நாகராசா இராசநாயகம் என்பவரை பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்;*

*இப்போது திருகோணமலை நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் சஜித் வசந்த வெல்கம ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ (1) (அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, நாகராசா இராசநாயகம் என்பவர், திருகோணமலை நகர சபையின் 01 ஆம் இலக்க அன்புவழிபுரம் வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகிறேன்.*

*சஜித் வசந்த வெல்கம,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*திருகோணமலை நகர சபை.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*திருகோணமலை,*
*2018, ஏப்பிறல் 04.*

*4- 681*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.